## அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று தரமதிப்பீட்டில் A+ தகுதி பெற்றது)

---

நாள் : 13.06.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல்துறை, மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை ஆகியன இணைந்து நடத்தும் **“தரமான ஆராய்ச்சிக்கு தேவையான கருத்துரு தயாரித்தல்” (Developing Proposal for Qualitative Research)** என்னும் தலைப்பில் மாநில அளவிலான மூன்று நாள் கருத்துப்பட்டறையின் துவக்க விழா 13.06.2017 அன்று மைய நூலக கருத்தரங்க அறையில் நடைபெற்றது.



இதன் துவக்க விழாவில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் பேசியதாவது: உயர் கல்விதுறையில் ஆசிரியர் என்பவர் கற்பிப்பவராக மட்டும் இல்லாமல் ஒரு சிறந்த நிர்வாகியாகவும், ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களின் நடத்தையையும், மனதையும் அறியவேண்டுமானால் ஒரு ஆசிரியர் தர மற்றும் பண்பறி ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். ஆசிரியர்கள், நிர்வாகம் மற்றும் ஆராய்ச்சி மனப்பாண்மையை

ஒருங்கே பெற்றிருந்தால் அவர்கள் சார்ந்த பள்ளி வெகுவாக முன்னேறும் என்றார். ஆசிரியர்களாக இருப்பதைவிட கல்வியாளராக இருப்பது கடினம். எனவே, ஆசிரியர்கள் கல்வியாளராக திகழ முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், தரமான ஆராய்ச்சி என்பது அறிவுப்பூர்வமான ஒரு தேடலாகும். குறிப்பாக, ஒரு புதுப்பார்வையோடு மனிதனுடைய நடத்தையையும், செயல்பாட்டையும் பற்றி ஆய்வு மேற்கொள்வதாகும். கூர்ந்த பார்வையோடு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்பை பற்றிய அனைத்து தகவல்களையும் சேகரித்து பின்னர் அறிவியல் ரீதியில் பகுப்பாய்வு செய்து பின்னர் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுவே ஒரு தரமான ஆராய்ச்சி ஆக கருதப்படும் என்றார்.




இந்நிகழ்ச்சியில் முனைவர்.திருஞானசம்பந்தம், முதல்வர், மாவட்டக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், காளையார்கோவில், முக்கிய உரையாற்றினார். அவர் தமது உரையில், ஆசிரியர்கள் மாணவர்களுடைய ஆர்வம் மற்றும் அவர்களிடம் பொதிந்துள்ள திறமைகள் பற்றி நன்கு ஆராய்ந்து அவர்களை வழிநடத்த வேண்டும். ஆசிரியர்கள் மேற்கொள்ளும் ஆய்வானது முற்றிலும் மாணவர்கள் நலன் பற்றியதாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் புல முதன்மையர் பேரா.சிவக்குமார், மற்றும் முனைவர் செல்லத்துரை, முதல்வர், மாவட்டக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுக்கோட்டை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த இன்பராஜ் கருத்துரை வழங்கினார். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 100-க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் இக்கருத்துப்பட்டறையில் பங்கேற்றனர்.

அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் துறைத்தலைவர்(பொ.), பேரா.க.கலையரசன் அனைவரையும் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர்.ராம்நாத் நன்றி கூறினார்.

பேரா. வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)